**நீதித்துறை நடுவர் கூடுதல் மகளிர் நீதிமன்றம், இராமநாதபுரம்.**
**முன்னிலை: திருமதி. S. கேத்ரின் ஜெப சகுந்தலா, BCA., LLB(Hons)., LLM.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, இராமநாதபுரம்.**
**நீதித்துறை நடுவர், (மு.கூ.பொ)**
**கூடுதல் மகளிர் நீதிமன்றம், இராமநாதபுரம்.**

2026–ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 09 ம் நாள் செவ்வாய்க்கிழமை

**குற்ற பல்வகை மனு எண். 72/2026**

**TNRM12-000126-2026**

முகம்மது சவுதா சிஹானா, (வயது 22)
க/பெ.சதக் அல் பஸாயிர்,
க.எண்.19/326, வடக்கு தெரு,
கீழக்கரை,
கீழக்கரை வட்டம்,
இராமநாதபுரம் மாவட்டம்.

... மனுதாரர் / முறையிடுபவர்

//எதிராக//

1. சதக் அல் பஸாயிர், (வயது 33)
த/பெ.சவுஹத் ஹயாத்கான்,
க.எண்.18/12, தெற்கு தெரு,
கீழக்கரை,
கீழக்கரை வட்டம்,
இராமநாதபுரம் மாவட்டம்.

2. தாஹிரா பேகம், (வயது 62)
க/பெ.சவுஹத் ஹயாத்கான்,
க.எண்.18/12, தெற்கு தெரு,
கீழக்கரை,
கீழக்கரை வட்டம்,
இராமநாதபுரம் மாவட்டம்.

3. ஹாசீபா, (வயது 42)
த/பெ.சவுஹத் ஹயாத்கான்,
க.எண்.18/12, தெற்கு தெரு,
கீழக்கரை,

கீழக்கரை வட்டம்,
இராமநாதபுரம் மாவட்டம்.

4. மிஸ்பஹறா, (வயது 38)
த/பெ.சவுஹத் ஹயாத்கான்,
க.எண்.18/12, தெற்கு தெரு,
கீழக்கரை,
கீழக்கரை வட்டம்,
இராமநாதபுரம் மாவட்டம்.

5. உமர் முக்தார், (வயது 40)
க.எண்.18/12, தெற்கு தெரு,
கீழக்கரை,
கீழக்கரை வட்டம்,
இராமநாதபுரம் மாவட்டம்.

6. முகைதீன் அப்துல்காதர், வயது 42
க.எண்.18/12, தெற்கு தெரு,
கீழக்கரை,
கீழக்கரை வட்டம்,
இராமநாதபுரம் மாவட்டம்.

7. அப்துல் முஜீப், (வயது 40)
க.எண்.18/12, தெற்கு தெரு,
கீழக்கரை,
கீழக்கரை வட்டம்,
இராமநாதபுரம் மாவட்டம்.

... எதிரிகள்

அரசுக்காக காவல் ஆய்வாளர் அவர்கள்,
கீழக்கரை காவல் நிலையம்,
கீழக்கரை.

... குற்ற முறையீட்டாளர்.

இந்த மனுவானது 16.05.2026 அன்று தாக்கல் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.A.S.அலாவுதீன் அவர்கள் ஆஜராகியும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று (09.06.2026) இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும்....

<u>உத்தரவு</u>

மனுதாரரால் இம்மனுவானது பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா பிரிவு 175(3) ன் கீழ் நடவடிக்கை எடுக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>(i) மனுவின் சுருக்கம்:–</u>

1) மனு சாராம்சத்தின்படி, 1ம் எதிரி மனுதாரரின் கணவர் என்றும், 2 முதல் 5 வரையிலான எதிரிகள் மனுதாரர் கணவரின் தாய், சகோதரி மற்றும் உறவினர்கள் ஆவார்கள். மனுதாரருக்கும், 1ம் எதிரிக்கும் கடந்த 30.12.2021 அன்று மஸ்ஜிதுல் மன்பஊ ஜூம்மா பள்ளிவாசல் வடக்கு தெரு ஜமாஅத் பள்ளிவாசல் தெற்கு தெரு மஸ்ஜித் பரிபாலன கமிட்டி ஜஅமாஅத் பள்ளிவாசல் ஆகியோர்களின் முன்னிலையில் இஸ்லாமிய முறைப்படி இருவீட்டாரின் சம்மதத்துடன் மனுதாரரின் பெற்றோர் 7 கோல் வீட்டடி மனை, 50 சவரன் தங்க நகைகள் (இதை மட்டும் மனுதாரரின் கணவரின் பெற்றோர்கள் குறிப்பிட வேண்டாம் என்று கேட்டுக்கொண்டதால் வடக்கு தெரு ஜமாஅத் நிக்காஹ் புத்தகத்தில் இதை குறிப்பிடவில்லை. மேலும் மனுதாரரின் கணவர் மனுதாரருக்கு 51 கிராம் தங்கநகை மகராஹா கொடுத்ததாக மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது) மற்றும் ரூபாய் 10 இலட்சம் ஸ்ரீதனம் வரதட்சணையாக கடன் வாங்கி கொடுத்து மனுதாரருக்கு திருமணம் செய்து வைத்தனர் என்றும், திருமணத்திற்கு முன் மனுதாரரின் வீட்டிற்கு வந்து, மனுதாரரின் உடன்பிறந்த மூத்த சகோதரியை பெண்கேட்டும், அவருக்கு ஏற்கெனவே அவர்கள் உறவினர் மகனை திருமணம் செய்ய பேசி வைத்திருந்ததால் அதற்கடுத்து மனுதாரரை பெண்பார்க்க பலமுறை 2 முதல் 5 எதிரிகள் மற்றும் அவரது உறவினர்கள் மனுதாரரின் உருவம் உடல்நிலை மற்றும் பழக்கவழக்கம் தெரிந்தே மனுதாரரின் பெற்றோர்களை வற்புறுத்தி பெண்கேட்டு அதன் பின்னரே திருமணம் நடந்தது என்றும், திருமணத்திற்கு பிறகு கீழக்கரை வழக்கப்படி மனுதாரரின் கணவர் 1ம் எதிரி, 2 மாதங்கள்

மனுதாரர் வீட்டில் வசித்து வந்தார் என்றும் இந்நிலையில் தேனிலவுக்கு சென்ற இடத்தில் மனுதாரருக்கும் மற்றும் அவரது கணவருக்கும் விபத்து ஏற்பட்டு மனுதாரர் வீட்டிலேயே மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொண்டு அவருடனே வசித்து வந்தார் என்றும், அவர்களது மருத்துவ செலவுக்கு மொத்தம் ரூபாய் இரண்டரை இலட்சம் வரை மனுதாரரின் பெற்றோரே செலவு செய்தனர் என்றும், 2ம் எதிரி அதற்கு ஒரு பைசா கூட செலவு செய்யவில்லை என்றும் கூறியுள்ளார்கள்.

2) 1 முதல் 5 எதிரிகள் திருமணமான நாளில் இருந்தே மனுதாரருடன் வசித்து வந்த காலங்களில் அவரை நேரடியாகவே, அவரது உடல்பருமனை தவறாக பேசியும், நடிகைகளுடனும், மற்ற பெண்களுடனும் மனுதாரரை ஒப்பிட்டும், மனுதாரரை தாம்பத்தியம் செய்து கொண்டே மனரீதியாக துன்புறுத்தி கேவலமாக நடத்தி வந்தார் என்றும், இதன் காரணமாக Paleo Diet என்ற முறையில் மனுதாரரது உடல்பருமனை குறைக்க வேண்டி அவரை பலநாட்களாக கட்டாப்படுத்தி துன்புறுத்தினார் என்றும், மனுதாரரின் கர்ப்பகாலத்திலும், பேறுகாலத்திலும் கடந்த செப்டம்பர் 2022ம் காலகட்டம் முதல் 1ம் எதிரியும், 2 முதல் 5 எதிரிகள் சேர்ந்து கொண்டு மனுதாரரை உடல் மற்றும் மனரீதியாக துன்புறுத்தினார்கள் என்றும், மனுதாரருக்கு ஒரு பெண்குழந்தை பிறந்து இரண்டரை வயது ஆகிறது என்றும், பேறுகால செலவு அனைத்தையும் மனுதாரரின் பெற்றோரே செலவு செய்தனர் என்றும், 1ம் எதிரி ஒரு பைசாகூட செலவு செய்யவில்லை என்றும், குழந்தை பிறந்த 10 நாட்களிலேயே 1ம் எதிரி, மனுதாரரை வற்புறுத்தி, உடல்பருமனை குறைக்க வேண்டும் என்ற பெயரில் மனுதாரரை உடற்பயிற்சி நிலையத்திற்கு சென்றால்தான் உன்னுடன் குடும்பம் நடத்துவேன் என்று சொல்லி, தினமும் உடற்பயிற்சி செய்ய வைத்து உடல்எடையை அளவீடு செய்து கொடுமைப்படுத்தினார் என்றும், மனுதாரர் மன மற்றும் உடல்ரீதியான

வலியை, குழந்தை மற்றும் குடும்ப வாழ்க்கைக்காக அவர் செய்த வன்கொடுமையை பொறுத்துக்கொண்டு இருந்து வந்தார் என்றும், அதனால் மனுதாரருக்கு அவ்வப்போது உடல்வலி தலைசுற்று, வாந்தி, மயக்கம் மற்றும் ஒவ்வாமை ஏற்பட்டும், இவை அனைத்தும் 1ம் எதிரிக்கு தெரிந்தும், மனுதாரரை தொடர்ந்து செய்ய சொல்லி கட்டாயப்படுத்தினார் என்றும் கூறியுள்ளார்.

3) திருமணமான காலத்தில் மனுதாரரின் குடும்ப செலவிற்கு மாதம் தோறும் இல்லாமல் அவ்வப்போது ரூ.5,000/- தந்தார் என்றும், குழந்தை பிறந்த பின் ரூ.7,000/- ஆக 2024ம் ஆண்டில் 3 மாதத்திற்கு மட்டும் தந்தார் என்றும், மனுதாரரையும், அவரது குழந்தையையும், மனுதாரரின் பெற்றோரே மிகவும் சிரமப்பட்டு பராமரித்து வருகின்றனர் என்றும், மனுதாரரை கட்டாயமாக கல்லூரிக்கு சென்று பட்டப்படிப்பு படிக்க சொல்லியும், அதற்காக மனுதாரின் பெற்றோர் கஷ்டப்பட்டு ரூபாய் இரண்டரை இலட்சம் கடன் வாங்கி செலவு செய்து பி.பி.ஏ., படிக்க வைத்தனர் என்றும், அதற்கு 1ம் எதிரி ஒரு ரூபாய் கூட செலவு செய்யவில்லை என்றும், 1ம் எதிரி B.E., Civil Engineering பட்டப்படிப்பு படித்திருப்பதாகவும், வெளிநாட்டில் வேலை செய்வதாகவும் திருமணத்திற்கு முன் பொய்யாக கூறியுள்ளார்கள் என்றும், மனுதாரர் பி.இ., மட்டும் படித்துள்ளார் என்றும், வெளிநாட்டில் வேலை எதுவும் செய்யவில்லை என்று திருமணத்திற்கு பின்பு தான் தெரியவந்தது என்றும், பின்னர் வெளிநாட்டில் வேலை தேடுவதாக சொல்லி, திருமணமானபின் வெளிநாடு சென்று, வேலை கிடைக்காமல் 3 மாதத்திற்கு திரும்பி வந்துவிட்டார் என்றும், பின்னர் துபாய்க்கு வேலைக்கு சென்றதில் இருந்து மனுதாரரின் திருமண வாழ்க்கையில் 2 முறை மட்டுமே 2022ம் வருடம் ஆகஸ்ட் மாதம் முதல் அக்டோபர் மாதம் வரையும், 2023ம் வருடம் அக்டோபர் மாதம் ஒரு வாரமும் கீழக்கரை வழக்கப்படி திருமணமான ஆண், பெண்

வீட்டில் வசிப்பது நடைமுறை என்பதால் 1ம் எதிரி, மனுதாரரையும், குழந்தையையும் பார்க்க மனுதாரர் வீட்டிற்கு வந்தார் என்றும், அதன்பிறகு அவர்களை பார்க்க வரவில்லை, அவரை செல்போன் மூலம் தொடர்பு கொண்டாலும் பதில் பேசமாட்டார், மனுதாரர், 1ம் எதிரி அவரது செல்போனில் பிளாக் செய்துவிடுவார் என்றும், துபாய் நாட்டிற்கு அழைத்து சென்று குடும்பம் நடத்துவதாக பொய் சொல்லியதால், மனுதாரரின் பெற்றோர், மனுதாரருக்கும், அவரது குழந்தைக்கும் பாஸ்போர்ட் எடுக்க மிகுந்த செலவு செய்தனர் என்றும், அதன்பிறகு வெளிநாட்டிற்கு அழைத்து செல்லவில்லை என்றும், அதன் பின்னர் 2 முதல் 5 எதிரிகளின் பேச்சை கேட்டுக்கொண்டு மனுதாரரையும், அவரது குழந்தையையும் பார்க்க வரவில்லை என்றும் கூறியுள்ளார்.

4) 1 முதல் 5 எதிரிகள் கடந்த 2024 மே மாத காலகட்டத்தில் மனுதாரரும், அவரது குழந்தையும், 1ம் எதிரியுடன் வாழ வேண்டும் என்றால் கூடுதல் வரதட்சணை கேட்டும், மனுதாரர் பெயரில் உள்ள வீட்டடி மனையில் உடனே வீடு கட்டி, 1ம் எதிரியின் கணவர் பெயருக்கு பதிவு செய்து கொடுக்க வேண்டும் என்றும், இல்லை என்றால் வேறு ஒரு பெண்ணை 1ம் எதிரிக்கு திருமணம் செய்யபோவதாகவும், மனுதாரரை தினமும் உடல் மற்றும் மனரீதியாக திட்டி கொடுமைப்படுத்தி வந்தனர் என்றும், மனுதாரரின் பெற்றோர் இதற்கு வசதியில்லை, உடனே இதனை செய்து தர முடியாது என்று கூறியும், இது கொண்டு வந்தால் வா இல்லையென்றால் வீட்டை விட்டு வெளியே போடி என்று சொல்லி மனுதாரரையும், குழந்தையையும், 1ம் எதிரியின் வீட்டில் இருந்து அடித்து வெளியே விரட்டி விட்டனர் என்றும், இது சம்மந்தமாக மனுதாரரின் கணவரை, மனுதாரருடன் சேர்ந்து வாழ வைப்பதற்கு ஜமாத்தில் புகார் கொடுத்தும், அதற்கு மனுதாரரின் கணவர் பதில் தராமலும் பேச்சுவார்த்தைக்கு வராமலும் அதனை புறக்கணித்து வந்தனர்

என்றும், மேலும், தலாக் கூறிவிடுவேன் என்றும், குழந்தையை மனுதாரரின் கணவரிடம் கொடுத்துவிட்டு, மனுதாரர் அவரை விட்டு தனியாக பிரிந்து சென்றுவிட வேண்டும் என்றும் 1 முதல் 5 எதிரிகள் மிரட்டினர் என்றும், தற்போது 1ம் எதிரி வெளிநாட்டில் இன்ஜினியர் ஆக வேலை செய்து இந்திய மதிப்பிற்கு ரூ.2,32,380/− சம்பளம் வாங்குகிறார் என்றும், மேலும் அவருக்கு சென்னை லிங்கிசெட்டி தெருவில் அவரது பெயரில் ரூபாய் ஐந்தரை கோடி மதிப்பில் கட்டிடமும் அதில் மொத்தம் ரூபாய் ஏழரை இலட்சம் வாடகை வருமானமும் கிடைக்கின்றது என்றும், ஆனால் 1ம் எதிரி, 2 முதல் 5 எதிரிகளின் பேச்சை கேட்டுக்கொண்டு மனுதாரரையும், அவரது கைக்குழந்தையையும் வேண்டுமென்றே புறக்கணித்து வருகின்றார் என்றும், மனுதாரருக்கும், அவரது குழந்தைக்கும் மாதம் உணவு, உடை, மருத்துவசெலவு ஆகியவற்றிற்கு ரூ.25,000/−மேல் தேவைப்படுகிறது என்றும், இருந்தும் மனுதாரரின் பெற்றோர் கடன்வாங்கி செலவு செய்து வருகின்றனர் என்றும் கூறியுள்ளார்.

5) 2 முதல் 5 எதிரிகள், 1ம் எதிரியுடன் சேர்ந்து கொண்டு மனுதாரரை கேவலமாகவும், அசிங்கமாகவும் திட்டியும், மன மற்றும் உடல்ரீதியாகவும் Harassment செய்தும், குடும்ப வன்முறை செய்தும், கூடுதல் வரதட்சணை கேட்டும், ஜீவனம் செய்யாமல் புறக்கணித்தும் வருகின்றார் என்றும், இதனால் காவல் நிலையத்தில் புகார் செய்தும், எதிரிகள் விசாரணைக்கு ஆஜராகவில்லை என்றும், அதன் பிறகு கடந்த 05.03.2026 அன்றும், அதனை தொடர்ந்து கடந்த 17.03.2026 அன்றும் UAE நாட்டில் அபுதாபியில் இருந்து கொண்டு அவரே அனுப்பியது போல கீழக்கரை அஞ்சல் நிலையத்தில் இருந்து பதிவு தபால் மூலமும் The Muslim Women (Protection of Rights of Marriage Act 2019)−ன் பிரிவு 3ன்படி தடைசெய்யப்பட்ட முத்தலாக் முறையில், மனுதாரருக்கு முத்தலாக் கூறி அதற்கு சாட்சிகளாக 6, 7

எதிரிகள் உடந்தையாக செயல்பட்டும், 1 முதல் 5 எதிரிகள் கூட்டுசதி செய்து மனுதாரருக்கு சட்டத்தால் தடை செய்யப்பட்ட முத்தலாக் கூறியுள்ளனர் என்றும், இது குறித்து கீழக்கரை காவல் நிலைய காவல் ஆய்வாளரிடம் 29.03.2026 அன்று கீழக்கரை காவல் நிலைய ஆய்வாளரிடம் புகார் செய்தும், விசாரணைக்கு ஆஜராகாமல் தலைமறைவாக இருந்து வருகின்றனர் என்றும், அதனால் 1 முதல் எதிரிகளின் குற்றச்செயல்கள் குறித்து சட்டப்பிரிவுகள் 296(b), 115(2), 351(2), 74, 85, 86(b) BNS & 4 of TNPHW Act, 61(2) BNSS r/w The Muslims Women (Protection of Rights of Marriage Act 2019)–ன்படியும், 6, 7 எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 61(2) BNSS r/w The Muslims Women (Protection of Rights of Marriage Act 2019)–ன்படியும் எதிரிகளின் மீது தக்க நடவடிக்கை எடுக்க கீழக்கரை காவல் நிலைய காவல் ஆய்வாளருக்கு உத்தரவிடுமாறு கூறி மனுதாரர் மனு தாக்கல் செய்துள்ளார்.

**(ii) பரிசீலனை:–**

மனுதாரர் தனது மனுவுடன் புகார் மனு மற்றும் அது சம்மந்தமான ஆவணங்களையும் தாக்கல் செய்துள்ளார். மனு சங்கிதிகளை பரிசீலிக்கையில் 1ம் எதிரி மனுதாரரின் கணவர், 2 முதல் 5 வரையிலான எதிரிகள் மனுதாரர் கணவரின் தாய், சகோதரி மற்றும் உறவினர்கள் ஆவார்கள். மனுதாரருக்கும், 1ம் எதிரிக்கும் கடந்த 30.12.2021 அன்று மஸ்ஜிதுல் மன்பஊ ஜூம்மா பள்ளிவாசல் வடக்கு தெரு ஜமாஅத் பள்ளிவாசல் தெற்கு தெரு மஸ்ஜித் பரிபாலன கமிட்டி ஜஅமாஅத் பள்ளிவாசல் ஆகியோர்களின் முன்னிலையில் இஸ்லாமிய முறைப்படி இருவீட்டாரின் சம்மதத்துடன் மனுதாரரின் பெற்றோர் 7 கோல் வீட்டடி மனை, 50 சவரன் தங்க நகைகள், ரூபாய் 10 இலட்சம் ஸ்ரீதனம் வரதட்சணையாக கடன் வாங்கி கொடுத்து மனுதாரருக்கு திருமணம் செய்து வைத்ததாகவும், திருமணத்திற்கு முன் மனுதாரரின் வீட்டிற்கு வந்து, மனுதாரரின்

உடன்பிறந்த மூத்த சகோதரியை பெண்கேட்டும், அவருக்கு ஏற்கெனவே அவர்கள் உறவினர் மகனை திருமணம் செய்ய பேசி வைத்திருந்ததால் அதற்கடுத்து மனுதாரரை பெண்பார்க்க பலமுறை 2 முதல் 5 எதிரிகள் மற்றும் அவரது உறவினர்கள் மனுதாரரின் உருவம் உடல்நிலை மற்றும் பழக்கவழக்கம் தெரிந்தே மனுதாரரின் பெற்றோர்களை வற்புறுத்தி பெண்கேட்டு அதன் பின்னரே திருமணம் நடந்ததாகவும், இந்நிலையில் தேனிலவுக்கு சென்ற இடத்தில் மனுதாரருக்கும் மற்றும் அவரது கணவருக்கும் விபத்து ஏற்பட்டு மனுதாரர் வீட்டிலேயே மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொண்டு அவருடனே வசித்து வந்தார் என்றும், அவர்களது மருத்துவ செலவுக்கு மொத்தம் ரூபாய் இரண்டரை இலட்சம் வரை மனுதாரரின் பெற்றோரே செலவு செய்தார்கள் என்றும், 2ம் எதிரி செலவு எதுவும் செய்யவில்லை என்றும், 1 முதல் 5 எதிரிகள் திருமணமான நாளில் இருந்தே மனுதாரருடன் வசித்து வந்த காலங்களில் அவரை நேரடியாகவே, அவரது உடல்பருமனை தவறாக பேசியும், நடிகைகளுடனும், மற்ற பெண்களுடனும் மனுதாரரை ஒப்பிட்டும், மனுதாரரை தாம்பத்தியம் செய்து கொண்டே மனரீதியாக துன்புறுத்தி கேவலமாக நடத்தி வந்ததாகவும், இதன் காரணமாக Paleo Diet என்ற முறையில் மனுதாரரது உடல்பருமனை குறைக்க வேண்டி அவரை பலநாட்களாக கட்டாப்படுத்தி துன்புறுத்தியதாகவும், மனுதாரரின் கர்ப்ப காலத்திலும், பேறுகாலத்திலும் கடந்த செப்டம்பர் 2022ம் காலகட்டம் முதல் 1ம் எதிரியும், 2 முதல் 5 எதிரிகள் சேர்ந்து கொண்டு மனுதாரரை உடல் மற்றும் மனரீதியாக துன்புறுத்தியதாகவும், மனுதாரருக்கு ஒரு பெண்குழந்தை பிறந்து இரண்டரை வயது ஆகிறது என்றும், பேறுகால செலவு அனைத்தையும் மனுதாரரின் பெற்றோரே செலவு செய்ததாகவும், 1ம் எதிரி செலவு எதுவும் செய்யவில்லை என்றும், குழந்தை பிறந்த 10 நாட்களிலேயே 1ம் எதிரி, மனுதாரரை வற்புறுத்தி, உடல்பருமனை குறைக்க வேண்டும் என்ற பெயரில் மனுதாரரை உடற்பயிற்சி நிலையத்திற்கு

சென்றால்தான் உன்னுடன் குடும்பம் நடத்துவேன் என்று சொல்லி, தினமும் உடற்பயிற்சி செய்ய வைத்து உடல்எடையை அளவீடு செய்து கொடுமைப்படுத்தியதாகவும், அதனால் மனுதாரருக்கு அவ்வப்போது உடல்வலி தலைசுற்று, வாந்தி, மயக்கம் மற்றும் ஒவ்வாமை ஏற்பட்டும், இவை அனைத்தும் 1ம் எதிரிக்கு தெரிந்தும், மனுதாரரை தொடர்ந்து செய்ய சொல்லி கட்டாயப்படுத்தினார் என்றும் கூறியுள்ளார்.

மேலும், திருமணமான காலத்தில் மனுதாரரின் குடும்ப செலவிற்கு மாதம் தோறும் இல்லாமல் அவ்வப்போது ரூ.5,000/– தந்ததாகவும், குழந்தை பிறந்தபின் ரூ.7,000/– ஆக 2024ம் ஆண்டில் 3 மாதத்திற்கு மட்டும் தந்ததாகவும், மனுதாரரையும், அவரது குழந்தையையும், மனுதாரரின் பெற்றோரே மிகவும் சிரமப்பட்டு பராமரித்து வருவதாகவும், மனுதாரரை கட்டாயமாக கல்லூரிக்கு சென்று பட்டப்படிப்பு படிக்க சொன்னதால், அதற்கான செலவை மனுதாரின் பெற்றோர் கஷ்டப்பட்டு ரூபாய் இரண்டரை இலட்சம் கடன் வாங்கி செலவு செய்து பி.பி.ஏ., படிக்க வைத்ததாகவும், அதற்கு 1ம் எதிரி செலவு எதுவும் செய்யவில்லை என்றும், 1ம் எதிரி B.E., Civil Engineering பட்டப்படிப்பு படித்துவிட்டு, வேலை இல்லாமல் இருந்து வந்தார் என்றும், பின்னர் துபாய் நாட்டிற்கு வேலைக்கு சென்றதில் இருந்து மனுதாரரின் திருமண வாழ்க்கையில் 2 முறை மட்டுமே 2022ம் வருடம் ஆகஸ்ட் மாதம் முதல் அக்டோபர் மாதம் வரையும், 2023ம் வருடம் அக்டோபர் மாதம் ஒரு வாரமும் கீழக்கரை வழக்கப்படி திருமணமான ஆண், பெண் வீட்டில் வசிப்பது நடைமுறை என்பதால் 1ம் எதிரி, மனுதாரரையும், குழந்தையையும் பார்க்க மனுதாரர் வீட்டிற்கு வந்ததாகவும், அதன்பிறகு அவர்களை பார்க்க வரவும் இல்லை, அவரை செல்போன் மூலம் தொடர்பு கொண்டாலும் பதில் பேசாமல், மனுதாரரை, 1ம் எதிரி அவரது செல்போனில் பிளாக் செய்துவிடுவார் என்றும், துபாய் நாட்டிற்கு அழைத்து சென்று குடும்பம் நடத்துவதாக சொல்லியதாகவும், அதன்பின்னர் வெளிநாட்டிற்கு அழைத்து

செல்லவில்லை என்றும், அதன் பின்னர் 2 முதல் 5 எதிரிகளின் பேச்சை கேட்டுக்கொண்டு மனுதாரரையும், அவரது குழந்தையையும் பார்க்க வரவில்லை என்றும், 1 முதல் 5 எதிரிகள் கடந்த 2024 மே மாத காலகட்டத்தில் மனுதாரரும், அவரது குழந்தையும், 1ம் எதிரியுடன் வாழ வேண்டும் என்றால் கூடுதல் வரதட்சணை கேட்டும், மனுதாரர் பெயரில் உள்ள வீட்டடி மனையில் உடனே வீடு கட்டி, 1ம் எதிரியின் கணவர் பெயருக்கு பதிவு செய்து கொடுக்க வேண்டும் என்றும், இல்லை என்றால் வேறு ஒரு பெண்ணை 1ம் எதிரிக்கு திருமணம் செய்யபோவதாகவும், மனுதாரரை தினமும் உடல் மற்றும் மனரீதியாக திட்டி கொடுமைப்படுத்தி வந்தனர் என்றும், மனுதாரரின் பெற்றோர் இதற்கு வசதியில்லை, உடனே இதனை செய்து தர முடியாது என்று கூறியும், இது கொண்டு வந்தால் வா இல்லையென்றால் வீட்டை விட்டு வெளியே போடி என்று சொல்லி மனுதாரரையும், குழந்தையையும், 1ம் எதிரியின் வீட்டில் இருந்து அடித்து வெளியே விரட்டியதாகவும், இது சம்மந்தமாக மனுதாரரின் கணவரை, மனுதாரருடன் சேர்ந்து வாழ வைப்பதற்கு ஜமாத்தில் புகார் கொடுத்தும், அதற்கு மனுதாரரின் கணவர் பதில் தராமலும் பேச்சுவார்த்தைக்கு வராமலும் அதனை புறக்கணித்து வந்ததாகவும், மேலும், தலாக் கூறிவிடுவதாகவும், குழந்தையை மனுதாரரின் கணவரிடம் கொடுத்துவிட்டு, மனுதாரர் அவரை விட்டு தனியாக பிரிந்து சென்றுவிட வேண்டும் என்றும் 1 முதல் 5 எதிரிகள் மிரட்டியதாகவும், தற்போது 1ம் எதிரி வெளிநாட்டில் இன்ஜினியர் ஆக வேலை செய்து இந்திய மதிப்பிற்கு ரூ.2,32,380/– சம்பளம் வாங்குகிறார் என்றும், மேலும் அவருக்கு சென்னை லிங்கிசெட்டி தெருவில் அவரது பெயரில் ரூபாய் ஐந்தரை கோடி மதிப்பில் கட்டிடமும் அதில் மொத்தம் ரூபாய் ஏழரை இலட்சம் வாடகை வருமானமும் கிடைக்கின்றது என்றும், ஆனால் 1ம் எதிரி, 2 முதல் 5 எதிரிகளின் பேச்சை கேட்டுக்கொண்டு மனுதாரரையும், அவரது கைக்குழந்தையையும் வேண்டுமென்றே புறக்கணித்து வருவதாகவும்,

மனுதாரருக்கும், அவரது குழந்தைக்கும் மாதம் உணவு, உடை, மருத்துவசெலவு ஆகியவற்றிற்கு ரூ.25,000/–மேல் தேவைப்படுவதாகவும், 2 முதல் 5 எதிரிகள், 1ம் எதிரியுடன் சேர்ந்து கொண்டு மனுதாரரை கேவலமாகவும், அசிங்கமாகவும் திட்டியும், மன மற்றும் உடல்ரீதியாகவும் Harassment செய்தும், குடும்ப வன்முறை செய்தும், கூடுதல் வரதட்சணை கேட்டும், ஜீவனம் செய்யாமல் புறக்கணித்தும் வருகிறார்கள் என்றும், இதனால் காவல் நிலையத்தில் புகார் செய்தும், எதிரிகள் விசாரணைக்கு ஆஜராகவில்லை என்றும், அதன் பிறகு கடந்த 05.03.2026 அன்றும், அதனை தொடர்ந்து கடந்த 17.03.2026 அன்றும் UAE நாட்டில் அபுதாபியில் இருந்து கொண்டு அவரே அனுப்பியது போல கீழக்கரை அஞ்சல் நிலையத்தில் இருந்து பதிவு தபால் மூலமும் The Muslim Women (Protection of Rights of Marriage Act 2019)–ன் பிரிவு 3ன்படி தடைசெய்யப்பட்ட முத்தலாக் முறையில், மனுதாரருக்கு முத்தலாக் கூறி அதற்கு சாட்சிகளாக 6, 7 எதிரிகள் உடந்தையாக செயல்பட்டும், 1 முதல் 5 எதிரிகள் கூட்டுசதி செய்து மனுதாரருக்கு சட்டத்தால் தடை செய்யப்பட்ட முத்தலாக் கூறியுள்ளதால், இது குறித்து கீழக்கரை காவல் நிலைய காவல் ஆய்வாளரிடம் 29.03.2026 அன்று கீழக்கரை காவல் நிலைய ஆய்வாளரிடம் புகார் செய்தும், விசாரணைக்கு ஆஜராகாமல் தலைமறைவாக இருந்து வருகிறார்கள் என்பதும், மனு வாயிலாக தெரிய வருவதால், கொள்தகு குற்றத்திற்கு தேவையான அடிப்படை அம்சங்கள் மனுவில் உள்ளது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும், இம்மனுவானது உரிய நடைமுறைகளை பின்பற்றி சரியான நேரத்தில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரரின் கோரிக்கை ஏற்பதே சரியானது என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**(iii) தீர்வு:–**

முடிவில், மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனு மற்றும் ஆவணங்களை நிலைய பொறுப்பு அலுவலர் கீழக்கரை காவல் நிலையத்திற்கு அனுப்பி வைக்க உத்தரவிடப்படுகிறது. மேலும், கீழக்கரை காவல் நிலைய பொறுப்பு அலுவலர் இதனை பெற்று முதல் விசாரணை (preliminary enquiry) மேற்கொண்டு அதன்பிறகு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சட்டப்படி புலன் விசாரணை மேற்கொள்ள பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா பிரிவு 175(3) ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று (09.06.2026) இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

CATHRENE JEBA SAKUNTHALA S

Digitally signed by CATHRENE JEBA SAKUNTHALA S
Date: 2026.06.09 16:24:38 +0530

நீதித்துறை நடுவர், (மு.கூ.பொ)
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
இராமநாதபுரம்.